செ.வெ.எண்: 58 நாள்:23.01.2017

# தமிழகஅரசின் சிறுசேமிப்புத்திட்டத்தில் பொதுமக்கள் சேர்ந்து பயன்பெற வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற முகவர்களுக்கு பாராட்டுக் கேடயம் மற்றும் சேமிப்பு பத்திரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் இன்று (23.01.2017) வழங்கி கூறியதாவது:

தமிழகஅரசு சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் பொதுமக்களிடையே சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் சிறுசேமிப்புத்திட்டம் 2015-16ம் ஆண்டில் பொதுமக்களிடமிருந்து அதிக சேமிப்புகளை திரட்டி மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற மகளிர் முகவர் திருமதி.கவிதா அவர்களுக்கும், நிலை முகவரில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற திரு.சிவக்குமார் அவர்களுக்கும் முறையே ரூ.3000 மதிப்பில் தேசிய சேமிப்பு பத்திரங்கள் மற்றும் ரூ.1000 மதிப்பில் பாராட்டுக் கேடயங்களும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சம்பளப்பட்டியல் சேமிப்புக்குழுவில் மாவட்ட அளவில் முதலிடம் பிடித்த பொன்னமராவதி உதவி தொடக்க கல்வி அலுவலகத்தை சேர்ந்த திருமதி.ராமதிலகம் அவர்களுக்கும் ரூ.3000 மதிப்பில் தேசிய சேமிப்பு பத்திரம் மற்றும் ரூ.1000 மதிப்பில் பாராட்டுக் கேடயம் வழங்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து பொதுமக்களும் தங்களது வாழ்வில் வளம் பெற சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி தமிழகஅரசின் சிறுசேமிப்புத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் சிறுசேமிப்புத்துறை அரசு அலுவலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**